VOLUME - II ISSUE - 2 FEB -2025

E-ISSN : 2584 - 1238


# சங்க இலக்கியங்கள் உணர்த்தும் விருந்தோம்பல் பண்பாடு


**முனைவர் ச.பிரபாகரன்,**
உதவிப் பேராசிரியர், இளநிலைத் தமிழ்த்துறை,
அய்யநாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
prabakaran_sf636@anjaconline.org


DOI 10.5281/zenodo.14788455.



**Abstract :**

The Tamil culture is thousands of years old since the world was created; Sangam literature is a proof that it has a long and proud history. The culture of the people who speak a particular language, their lifestyle, history, and civilization can be known through the literature that appeared in that language. Sangam literature contains many rare information necessary for human life. In this article, we can learn about the hospitality of the Tamil people of the Sangam period.


**Key Words : Sangam Literature - Hospitality - Culture -**


## முன்னுரை

தமிழர் பண்பாடு என்பது உலகம் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டு பழமையுடையது; நீண்ட நெடிய வரலாற்றுப் பெருமையுடையது என்பதற்குச் சான்றாதாரமாகச் சங்க இலக்கியங்கள் இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட மொழி பேசும் மக்களின் பண்பாட்டை அம்மக்களின் வாழ்க்கை முறை, வரலாறு, நாகரீகம் ஆகியவற்றை அம்மொழியில் தோன்றிய இலக்கியங்கள் வழியாக அறியலாம். சங்க இலக்கியங்களில் மனித வாழ்க்கைக்குத் தேவையான பல அரிய தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. இக்கட்டுரையில் சங்ககாலத் தமிழ் மக்களின் விருந்தோம்பல் பண்பினை அறிந்து கொள்ளலாம்.

## பண்பாடு

பண்பாடு என்பது “**மக்களால் ஆக்கப் பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர். மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும். அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.**”1 (ப.மா.ப.எண் 151-152); என்கிறார் மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்னட் லைடர்.

மேலும் இவர் ‘தொன்மைப் பண்பாடு’ (Primitive Culture) என்னும் நூலில் பண்பாடு பற்றி சில தகவல்களைக் குறிப்பிட்டுள்ளார். அவை,

> **“Culture or civilization, taken in its wide ethnographic sence,**
> **Is that complex whole which**
> **Includes knowledge, belief, art, morals, law,**
> **Custom, and any other capabilities and**



http://Creativecommons.org//license/by/4.0/.

**Habits acquired by man as a member of society"**[2](ப.மா.ப.எண். 152)

டைலரின் இவ்வரையறை இன்று மிகவும் புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது.

பண்பாடு என்ற சொல்லுக்கு விளக்கமாகப் "**பண்பெனப் படுவதுபாடறிந் தொழுகல்**" 3 (கலி.பா.எ.133) "**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்**" 4(குறள்.996) எனும் கலித்தொகைப் பாடலடியும்,குறளடியும் எடுத்துரைக்கின்றன.

**விருந்தோம்பல் பண்பு**

சங்ககாலத்தில் விருந்தோம்பல் சிறந்த நிலையில் பேணப்பட்டுள்ளது. கணவனுடன் கூடி வாழும் மங்கல மகளிர்க்குரிய தனிஉரிமையாக இருந்துள்ளது. கணவனை இழந்தவர்களும், பிரிந்து வாழ்பவர்களும் விருந்தை எதிர்கொண்டு வரவேற்கும் உரிமையைப் பெற்றதாகக் குறிப்புகள் காணப்படவில்லை. கோவலனைப் பிரிந்திருந்த கண்ணகி தனக்கு நேர்ந்த இழப்புக்களை நிரல்படுத்தும் போது,

"**விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை**" 5 (சிலம்பு, பா.எ.16:73)

என்று புலம்புவதை இப்பாடல் அடிஎடுத்துரைக்கின்றது.

"**விருந்தேதானும்**
**புதுவதுபுனைந்தயாப்பின் மேற்றே**" 6(தொல்.செய்யு.நூ.எ.231)

என்ற நூற்பா புதுமையை விதைக்கும் சிந்தனையை நமக்குக் காட்டுகிறது. புதுமை என்பது இந்த இடத்தில் வீட்டிற்கு வரும் விருந்தினர்களைப் பொருந்தி நிற்கிறது.

தன்னை நாடி வரும் வறியவருக்குப் புது ஆடைகள் தந்து அணியச் செய்து நல்ல உணவுகளைப் படைத்து உண்ணச் செய்தல் முதலிய நற்பண்புடையவர்களாக மன்னர்கள் திகழ்ந்துள்ளனர் என்பதை ஔவையின் பாடல் வழியாக அறிய முடிகின்றது. அதியமான் நெடுமானஞ்சி தன்னை நாடி வந்தவறியவருக்கு,

"**முதுநீர்ப் பாசியன்னஉடைகளைந்து**
**திருமலர் அன்னபுதுமடிக் கொளீ**
**மகிழ்தரல் மரபின் மட்டேயன்றியும்**
**அமிழ்தன் மரபின் ஊன்துவை அடிசில்**" 7 (புறம்.390)

என்ற புறநானுற்றுப் பாடலடிகள் வழியா கலைடர் கூறுகின்ற பழக்கவழக்கங்கள் குறித்த பண்பாட்டுச் செய்தி இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

**சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்**

இல்லறத்திற்கு வரும் விருந்தினர்களுக்குப் இன்முகத்துடன் விருந்து வழங்கினர். விருந்தினர்கள் இரவுப் பொழுதில் வந்தாலும் அவர்களுக்குக் கொழுப்பு நிறைந்த மாமிச உணவை நெய்விட்டுச் சமைத்துத் தந்தனர். இந்த விருந்தோம்பல் பண்பு இன்று வரை பண்பாட்டுச் செயல்பாடாக ஆகியுள்ளமையை

"**எல்லிவந்தநல் இசைவிருந்திற்கு**
**கிளர் இழைஅரிவைநெய்துழந்துஅட்ட**
**விளர் ஊன்……………………**" **8 (நற்.பா.எ.41)**


http://Creativecommons.org//license/by/4.0/.

என்றபாடல் அடிகள் வழி அறியமுடிகின்றது.

உணவுகள் அந்தந்த நாட்டின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றன. தட்பவெப்பநிலைக்கு ஏற்றவாறு இவை காணப்படுகின்றன. வரைவு (திருமணம்) நாளன்று விருந்து கொடுத்ததை,

**"உளுந்துதலைப் பெய்தகொழுங்களி**
**மிதவைபெருஞ்சோற்றுஅமலை நிற்ப"** 9 (**அகம். பா.எ.** 86 : 1-2)
**"அழுக்கின் நெய்க்கனி வெண்சோறு"** 10 (**அகம். பா.எ.** 136 : 1)
**"கொழுமீன் வல்சி"** 11 (**அகம். பா.எ.** 110:17)

என்ற பாடல் அடிகள் உளுந்தினை உணவில் அதிகமாகச் சேர்த்து வெண்சோறும், கொழுத்த மீனால் செய்யப்பட்ட உணவும் விருந்தினருக்கு வழங்கிய செய்தியை அகநானூறு குறிப்பிடுகின்றது. இந்தப் பழக்கவழக்கங்கள் மருதம், நெய்தல் திணையில் வாழ்ந்த இனக்குழச் சமூகத்திடம் காணப்படுவதை அறிய முடிகின்றது. உளுந்தினால் செய்யப்படுகின்ற உணவுப் பண்பாடு இன்றும் நம் வழக்கத்தில் காணப்படுகின்றது.

இரவு நேரத்தில் விருந்தினர்கள் வந்தாலும் மகிழ்வோடு விருந்து கொடுத்துள்ளனர். இதனை,

**"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
**முல்லைசான்றகற்பின்**
**மெல்லியற் குறுமகள் உறைவின் ஊரே"** 12 (**நற்**.பா.எ.142)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. மேலும், இரவு நேரத்தில் உறவினர்கள் வருகின்றார்களா? என்று பார்த்த பிறகு வாயிற்கதவை அடைக்கும் பழக்கத்தை முல்லைத் திணை மக்கள் பின்பற்றியதை இப்பாடல் வழி அறியமுடிகின்றது.

விருந்தோம்பல் என்பது தன் இல்லத்திற்குப் புதிதாகவரும் நபர்களை வரவேற்று அவர்களது பசி தீர உணவு கொடுப்பது பழந்தமிழர்களின் பண்பாடு என்பதை அகநானூறு எடுத்துக்காட்டுகின்றது. பரதவ மகளானவள் நெல்லினது அரிசிச் சோற்றில் அயிரைமீன் இட்டும் புளிக்கறியையும், கருவாட்டையும் உணவாக வழங்கினாள் என்பதை,

**"உப்பநொடைநெல்லின் முரல்வெண்சோறு**
**ஆயிரை சூழ்ந்தஅம்புளிச் சொரிந்து**
**கொடுமீன் தடியொடுகுறுமகள் கொடுக்கும்"** 13 (**அகம்**.பா.எ.60)

என்ற பாடல் வழியாக மீனுக்குப் புளியிட்டுச் சமைத்த வழக்கத்தை நெய்தல் திணை மக்கள் பின்பற்றினார்கள் என்பதை அறியமுடிகின்றது.

**"ஒலிகழைநெல்லின் அரிசியொடுலுராங்கு**
**ஆன் நிலைப்பள்ளிஅளைப் பெய்துஅட்ட**
**வாய் நிணம் உருக்கியவாஅல்வெண்சோறு**
**புகர்அரைத் தேக்கின் அகல் இலைமாந்தும்"** 14 (**அகம்**.பா.எ.107)

என்ற பாடல் வாயிலாக மூங்கில் அரிசியுடன் தயிர் இட்டு, இறைச்சி கூட்டிச் சமைத்து வெண்சோற்றைத் தேக்கு இலையில் வைத்துதம் இல்லம் தேடிவருபவர்களுக்கு உண்ணக் கொடுத்த


http://Creativecommons.org//license/by/4.0/.

நிலையினைப் பாலை நிலமக்கள் பின்பற்றிய செய்தியை அகநானூற்றுப் பாடல் வழியாக அறியமுடிகின்றது.

பண்டைய தமிழர்கள் கிடைப்பதற்கரிய அமுதம் கிடைத்தாலும் அதைதான் மட்டும் உண்ணாமல் பகிர்ந்து உண்ணும் பண்புடையவர்கள்.

**“உண்டாலம்ம இவ்வுலகம்**
**இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்**
**இனிதெனத் தமியார் உண்டலும் இலரே”** 15 (புறம்.பா.எ.142)

என்ற புறநானூற்றுப் பாடல் லைடரின் மானிடவியல் சிந்தனைகளுக்கு முன்னோட்டமாக இருந்திருக்கக் கூடும். அதியமான் என்ற மன்னன் தன்னிடம் வரும் இரவலர்களுக்கு ஒருநாள் வந்தாலும், இருநாள் வந்தாலும், பலநாள், பல புலவர்களோடு வந்தாலும் முதல் நாளில் வரவேற்றது போலவே இன்முகத்துடன் வரவேற்று விருந்து கொடுத்தான் என்பதனை,

**“ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**
**பன்னாள் பயின்றுபலரோடுசெல்லினும்**
**தலைநாள் போன்றவிருப்பினன் மாதோ”** 16 (புறம்.பா.எ.101)

என்ற புறநானூறு பாடல் லைடரின் ஒழுக்கநெறிகளையும், வழக்கங்களையும் பாடாண் திணைமக்கள் பின்பற்றியதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

பண்டைய காலத்து மக்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு நற்பண்பு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். விருந்தோம்பல் செய்தல், வறியோர்க்கு உதவுதல் எனத் தங்களை நாடிவருபவர்களுக்கு உணவுவழங்குதல், விருந்து வழங்கி அவர்களின் பசியைப் போக்குவதை இன்முகத்துடன் செய்திருந்த நிலையை லைடரின் மானுடவியல் சிந்தனை வழி சங்கஇலக்கியப் பாடல்கள் ஊடே பொருத்திப் பார்க்க இவ்வாய்வு முயல்கிறது.

துணைநின்றவை

1. பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சலபாரதி, மெய்யப்பன் பதிப்பகம்.சென்னை,மே,2016.
2. மேலது, ப.152.
3. சங்க இலக்கியம், கலித்தொகை, புலியூர் கேசிகன் (உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.
4. திருக்குறள், நாவலர் இரா.நெடுஞ்செழியன் (உ.ஆ), உலகத்த மிராராய்ச்சி நிறுவனம், சென்னை, 2023.
5. சிலப்பதிகாரம், ந.மு.வேங்கடசாமிநாட்டார் உரை, கௌரா பதிப்பகம்,சென்னை,2016.
6. தொல்காப்பியம், செய்யுளியியல், முனைவர் ச.திருஞானசம்பந்தம் (உ.ஆ), கதிர் பதிப்பகம், திருவையாறு, ஜூன் 2020.
7. சங்க இலக்கியம், புறநானூறு, புலியூர் கேசிகன் (உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

8. சங்க இலக்கியம், நற்றிணை, புலியூர் கேசிகன்(உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.
9. சங்க இலக்கியம், அகநானூறு, புலியூர் கேசிகன்(உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.
10. மேலது,
11. மேலது,
12. சங்க இலக்கியம், நற்றிணை, புலியூர் கேசிகன்(உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.
13. சங்க இலக்கியம், அகநானூறு, புலியூர் கேசிகன்(உ.ஆ),கங்கை புத்தக நிலையம், சென்னை,ஜூன், 2010.
14. மேலது,
15. சங்க இலக்கியம், புறநானூறு, புலியூர் கேசிகன்(உ.ஆ), கங்கை புத்தக நிலையம், சென்னை, ஜூன், 2010.
16. மேலது,


http://Creativecommons.org//license/by/4.0/.